செ.வெ.எண்.32 நாள்: 14.04.2020

**தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் சார்பில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளையொட்டி மாநகராட்சியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் முழு உருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்**

---

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளையொட்டி இன்று (14.04.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட தெற்கு காவல் நிலையம் அருகில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கார் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரானா பரவலை தடுக்கும் வகையில் அனைத்து நிகழ்ச்சிகள் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாள் அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அவரது திருஉருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும் என தெரிவித்திருந்தார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட தெற்கு காவல் நிலையம் அருகில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கார் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்றைய தினம் வரை 26 நபர்களுக்கு கொரானோ தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரானோ தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நபர்கள் தொடர்புள்ள நபர்களையும் ரத்த மாதிரி சேகரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களையும் உடல் பரிசோதனை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி பேக்கரிகள் காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பொதுமக்களுக்கு தேவையான பிரட், பன், பிஸ்கட் உள்ளிட்ட உணவு பொருட்களை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நமது மாவட்டத்திலும் பேக்கரி காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திறந்து வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. டீ, காபி உள்ளிட்டவை விற்பனை செய்ய அனுமதி இல்லை. தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியில் கொரானோ தொற்று உறுதி செய்வதற்கு ஆய்வகம் அமைக்கபதற்காக பணிகள் முடிவு பெற்றுள்ளது. ஐசிஎம்ஆர் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு சில நாட்களில் ஆய்வகம் திறந்து கொரானா தொற்று பரிசோதனை நமது மாவட்டத்திலேயே மேற்கொள்ள முடியும். பொதுமக்கள் சுய ஊரடங்கை உத்தரவினை முழுமையாக கடைபிடிக்க வேண்டும். பொதுமக்களுக்கு தேவையான காய்கறிகள் இருப்பிட அருகிலே கிடைப்பதற்கு நடமாடும் காய்கறி அங்காடி வாகனம் அதிக அளவில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்கள் ஒரே இடத்தில் அதிகமாக கூடுவதை தவிர்ப்பதற்காக தற்காலிகமாக பல்வேறு இடங்களில் காய்கறி மார்கெட் அமைக்கப்பட்டு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சமூக பரவல் ஏற்படாத வகையில் பொதுமக்கள் அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், தூத்துக்குடி வட்டாட்சியர் திரு.செல்வகுமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.நி.சையத் முகம்மத் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.